[29th August 1970

Admissions in Colleges

*50. *Q.*—THIRU SAW GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether there is any proposal to regulate admissions in colleges by pooling up applications at the State level ; and

(*b*) if so, the details thereof ?

கல்லூரிகளில் மாணவர்களை சேர்த்தல்

திரு. சா. கணேசன் : (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மாநில அளவில் மனுக்களைப் பெற்றுத் தொகுப்பதன் மூலம், கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கப்படுவதை முறைப்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், விவரமென்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ)வும் (இ)யும் : இல்லை.

திரு. டி. சந்தோஷம் : மாணவர்கள் சார்பாகவும், பெற்றோர்கள் சார்பாகவும் இதில் உள்ள கஷ்டங்களைப் பலமுறை அரசிற்கும் பல்கலைக் கழகத்திற்கும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். தங்களுக்கு இடம் கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயத்தில் எல்லாக் கல்லூரிகளுக்கும் மனுப் போடவேண்டியிருக்கிறது. என்ட்ரன்ஸ் ஃபீஸ் கட்ட வேண்டியிருக்கிறது. அதற்கும் சிபாரிசு செய்து காத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. இதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு மதுரைப் பல்கலைக் கழகம் தாங்கள் தயாராக இருப்பதாகச்சொல்கிறார்கள். அரசு முன்வந்தால், இதைச் செய்யலாம். இங்கிலாந்தில் இந்த முறை இருக்கிறது. மாணவர்கள், பெற்றோர்கள் நன்மையைக் கருதி அரசு ஏன் இதை அறிவிக்கக் கூடாது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இந்தத் திட்டத்திற்கு அரசு தடையாக இல்லை. இதை மாற்ற வேண்டியது பல்கலைக் கழகமாகத்தான் இருக்கிறது. பல்கலைக்கழகம் முடிவெடுத்து நடைமுறைக்குக் கொண்டுவந்தால், அரசு ஆதரவு அளிக்கும். பல்கலைக் கழகத்திற்கே எல்லாக் கல்லூரிகளுக்கான விண்ணப்பங்களையும் அனுப்பி, அவர்கள் அதைக் கவனித்து பிறகு பகிர்ந்தளித்தால், மாணவர்களுக்குச் சங்கடமில்லாமல் இருக்கும். சென்னைப் பல்கலைக்கழக செனட்டில் இது பற்றிப் பேசப்பட்டு அதிலேயே ஒரு துணைக் குழு அமைத்து ஆராய்ந்ததில், தனியார் கல்லூரிகள் பல அதற்கு ஒத்துவரவில்லை. அதன் காரணமாக விண்ணப்பத் தாள்களுக்கு ஒரு ரூபாய், பதிவு செய்யும்போது ஒருரூபாய், சேர்க்கப்படும்போது 2ரூபாய் வாங்குவது என்ற முறையைக் கையாளலாம் என்று அவர்கள் சிபாரிசு செய்தார்கள். அது சிபாரிசு

29th August 1970]

அளவில்தான் இருக்கிறது. பல கல்லூரிகள் தங்கள் விருப்பப்படி கட்டணத்தை வசூலிக்கிறார்கள். இதைக் கட்டுப்படுத்த வேண்டியது பல்கலைக்கழகமாக இருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகமும் மதுரைப் பல்கலைக் கழகமும் அந்த அந்த நகரங்களைப் பொறுத்தோ மாவட்டங்களைப் பொறுத்தோ, பொதுவாக விண்ணப்பங்களைப் பெற்று, ஒரேயிடத்தில் சேர்த்துக்கொண்டு, பிறகு கல்லூரிகளுக்கு அவற்றைப் பகிர்ந்தளிக்கும் முறையைக் கொண்டுவந்தால், அரசு அதற்கு ஆதரவு தரும். அரசினர் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், வேண்டுமானால் இதை மேற்கொள்ளலாம். கல்வி இயக்குனரிடத்தில் கேட்டபோது, மாவட்ட அளவில் இரண்டு மாவட்டங்களில் இப்படிச் செய்யலாம் என்றும், அதில் சரியாக வந்தால் பிறகு இந்தத் திட்டத்தை மற்ற மாவட்டங்களில் மேற்கொள்ளலாம் என்றும், முதலில் தென்னார்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் உள்ள அரசினர் கல்லூரிகளில் பொதுவாக விண்ணப்பங்களை வாங்கி அவற்றைப் பகிர்ந்தளிக்கலாம் என்றும் திட்டம் தந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு காலதாமதம் ஆய்விட்டதால், அது முடியவில்லை. அடுத்த ஆண்டு இதை நடைமுறைப்படுத்தலாம் என்ற யோசனை இருக்கிறது. எல்லாக் கல்லூரிகளுக்கும் இந்தத் திட்டத்தைக் கொண்டுவர பல்கலைக்கழகம்தான் முயற்சி எடுக்க வேண்டும். இன்ஜினீயரிங் கல்லூரியைப் பொறுத்தவரையில், தனியார் துறையில் உள்ள இன்ஜினீயரிங் கல்லூரிகளையும் சேர்த்துப் பொதுவாக வைத்துத்தான் மாணவர்கள் எடுக்கப்படுகிறார்கள். ஐந்திடம் பத்திடம் மானேஜ்மெண்ட்டாருக்குக் கொடுக்கும் முறை இருக்கிறது. அந்த அடிப்படையில் தனியார் துறையிலும்கூட குறிப்பிட்ட 5 சதவீதம் 10 சதவீதம் கொடுத்துவிட்டு மற்றவைகளை 'General Pool'ல் கொண்டுவந்தால் நல்லது. அதைப் பல்கலைக் கழகம்தான் செய்ய வேண்டும்.

திரு. கே. அறிவழகன் : மாணவர்களைக் கல்லூரியில் சேர்க்கும் முறையில் மாணவர்கள் தாங்கள் விரும்புகிற பாடங்களைப் பெற முடியாத நிலையிருக்கிறது. இருபதாண்டு காலமாக இருந்து வருகிற தேர்வு முறை, அதாவது கேள்விகேட்டு மறு வகுப்பிற்கு அனுப்புகிற முறைதான் இன்றும் இருக்கிறது. அத்தோடு கல்லூரியில் சேர்க்கப் படும்போதும், அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ கொடுக்கப்படுகிற பாடங்களைத்தான் ஏற்றுப் படிக்கவேண்டிய இக்கட்டான நிலையில் மாணவர்கள் இருக்கிறார்கள். அதனால் அவர்களிடையே அமைதியின்மை ஏற்படுகிறது. மதுரைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியவை இவற்றைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் அலட்சியமாக இருக்கிற சூழ்நிலையில், தேர்வு முறையில் மாணவர்களைச் சேர்க்கும் முறையை மாற்றியமைக்க ஒரு குழுவை இந்த அரசு அமைக்குமா ?

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் : இதுபற்றி ஒவ்வொரு கல்வி அமைச்சர்கள் மகாநாட்டிலும், கல்வி நிபுணர்கள் மகாநாட்டிலும் கல்வி ஆலோசகர்கள் மகாநாட்டிலும் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு தனிக்குழு அமைத்திருக்கிறது. தேர்வு முறையைப்பற்றி ஆராய்ந்து என்னென்ன சீர்திருத்தங்களைச் செய்யலாம் என்பது பற்றி இரண்டு, மூன்று மாநில அமைச்சர்களும், கல்வி

[29th August 1970

இயக்குனர்களும், கல்வி ஆலோசகர்களும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த நான்கைந்து குழுக்களில் தேர்வு பற்றி ஆராய்வதற்காக ஒரு குழுவும் இருக்கிறது. அந்தக் குழுவினர் தக்கபடி ஆராய்ந்து திட்டம் தருவார்களானல், நடைமுறைக்கு அவற்றைக் கொண்டுவரலாம். அதிலும் கூட சங்கடம் இருக்கிறது.

செல்வாக்குப்பெற்ற எல்லோரும் சேர விரும்புகிற சில கல்லூரிகளுக்குத்தான் எல்லோரும் சென்று சேர விரும்புகிருர்கள். அந்தந்தக் கல்லூரிகளில் படித்தவர்களை முதலில் சேர்த்துக்கொண்டு பிற கல்லூரி மாணவர்களைப் பிறகுதான் எடுத்துக்கொள்ளும் சூழ்நிலையிருப்பதால் அதில் சங்கடம் வருகிறது. போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ் இருக்கிற கல்லூரிகளில் அந்தக் கல்லூரியில் படித்தவர்களை மட்டும் எடுக்கும் நிலை வரும். பிரசிடென்சி, பச்சையப்பா, லயோலா, கிருஸ்தவக் கல்லூரி போன்றவைகளில் அப்படி முடிவு செய்தால், போஸ்ட் கிராஜுவேட் இல்லாத பள்ளிகளிலிருந்து படித்த மாணவர்கள் வரும்போது யாரையும் அந்தக் கல்லூரிகளில் எடுக்க முடியாத நிலை ஏற்படும். இதையெல்லாம் முறைப்படுத்தத்தான் சில முறைகளைக் கையாண்டு வருகிறேம். பல்கலைக் கழகம் அதை ஆராய்ந்து வருகிறது. தேர்வு முறையில் எக்சாமிநேஷன், அசெஸ்மெண்ட் என்று 50 மார்க்கும், ஃபைனல் எக்சாமிநேஷனுக்கு 50 மார்க்கும் கொடுக்கலாம் என்றிருக்கிறது. இதில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பிடிக்காமல் போய்விட்டால், அவர் வேண்டுமென்றே குறைத்து மார்க் போட்டு வேறு வகுப்பிற்குச் செல்லாமல் செய்துவிட்டார் என்ற குறையும் சொல்லப்படும். ஆகையால் கல்வி ஆலோசனைக் குழுவில், கன்ஸல்டேடிவ் கமிட்டியிலே இதை எடுத்து ஆராய்கிருர்கள். தக்க முடிவு வரும்போது அதைக் கையாள யோசிக்கலாம்.

Anti-God and Anti-Religious posters

*41. *Q.*—THIRU A.R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether it is a fact that Anti-God and Anti-Religious posters were displayed in many parts of Coimbatore City during April 1970 condemning theists as fools and barbarians ; and

(*b*) whether there is any proposal to avert display of such posters?

கடவுள்—சமய எதிர்ப்புச் சுவரொட்டிகள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கோயம்புத்தூர் மாநகரில் சில பகுதிகளில் ஆத்திகர்களை முட்டாள்கள் என்றும் காட்டு மிராண்டிகள் என்றும் கண்டித்து கடவுள் சமய எதிர்ப்புச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டனவா ?

(இ) அத்தகைய சுவரொட்டிகள் ஒட்டி வைப்பதைத் தடுக்கும் எண்ணம் உண்டா ?